# இணக்கத் தணிக்கைக் குழுவிற்கான விண்ணப்பங்களை நகர நிர்வாகம் வரவேற்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 3, 2022) – நகரின் இணக்கத் தணிக்கைக் குழுவில் சேவையாற்ற விருப்பம் கொண்ட குடிமக்களிடமிருந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் விண்ணப்பங்களை வரவேற்கிறது.

*முனிசிபல் தேர்தல்கள் சட்டம், 1996* இன் கீழ், ஒரு நகராட்சி தேர்தல் வேட்பாளர் அல்லது பதிவுசெய்யப்பட்ட மூன்றாம் தரப்பு விளம்பரதாரர் பிரச்சார நிதி தொடர்பான சட்டத்தின் விதியை மீறியிருக்கிறார் என்ற அடிப்படையில் நியாயமான நம்பிக்கை கொண்ட, தகுதியுள்ள வாக்காளர்களின் விண்ணப்பங்களை குழு பரிசீலிக்கும். குழுவானது குறைந்தபட்சம் மூன்று பேர் மற்றும் ஏழு பேர் வரை உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இவர்களின் பதவிக் காலமானது அடுத்த நகரசபையின் ஆயுட்காலமாகிய நவம்பர் 15, 2022 முதல் நவம்பர் 14, 2026 வரையிலான அதே காலமாக இருக்கும்.

**விண்ணப்பதாரர் தகுதிக்கான தேவைப்பாடுகள்**

விண்ணப்பதாரர்கள் ப்ராம்ப்ட்டனில் வசிக்கின்ற அல்லது பணிபுரிகின்ற தொழில் தகைமையாளர்களாக இருக்க வேண்டும். கூடுதலாக, கணக்கியல், தணிக்கை செய்தல், பொது நிர்வாகம் மற்றும்/அல்லது சட்டம் ஆகியவற்றில் பின்புலம் மற்றும் அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களை நகர நிர்வாகம் தேடுகிறது. விண்ணப்பதாரர்கள் இப்படி இருக்க வேண்டும்:

- நகராட்சி தேர்தல்கள் சட்டத்தின் பிரச்சார நிதியளிப்பு விதிகள் உட்பட, நகராட்சி தேர்தல்கள் பற்றிய அறிவு மற்றும் புரிதலை வெளிப்படுத்தியவராக
- நிரூபிக்கப்பட்ட பகுப்பாய்வு மற்றும் முடிவெடுக்கும் திறன் கொண்டவராக
- குழுக்கள், பணிப்படைகள் அல்லது ஒத்த அமைப்புகளில் பணிபுரிந்த அனுபவம் கொண்டவராக
- நீதித்துறை நடவடிக்கைகள் பற்றிய ஓரளவு அறிவை வெளிப்படுத்துபவராக
- பகல் மற்றும் மாலை நேரங்களில் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான நேரம் ஒதுக்குதல் மற்றும் விருப்பம் கொண்டவராக
- சிறந்த வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான தகவல் தொடர்பு திறன் கொண்டவராக

**விண்ணப்பிக்க தகுதியற்ற தனி நபர்கள்**

*முனிசிபல் தேர்தல்கள் சட்டத்தின்படி*, பின்வரும் நபர்கள் குழுவில் நியமனம் பெறத் தகுதியற்றவர்கள் ஆவர்:

• ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் அல்லது நகரத்திற்குள் உள்ள பள்ளி வாரியங்களின் பணியாளர்கள்

• ப்ராம்ப்ட்டன் நகர சபை அல்லது உள்ளூர் வாரிய உறுப்பினர்கள்

• குழு நிறுவப்பட்ட தேர்தலுக்கான வேட்பாளர்கள்

• தேர்தலுக்கென நிறுவப்பட்ட குழுவில் நகராட்சியில் பதிவு செய்துள்ள மூன்றாம் தரப்பினர்

விண்ணப்ப படிவங்கள் மற்றும் சுய விபர தகவல்கள் நகர க்ளார்க் அலுவலகத்தில் திங்கட்கிழமை 13, ஜூன், 2022 மாலை 4:30 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

ஒரு தேர்வுக் குழுவானது, விண்ணப்பதாரர்களை நேர்காணல் செய்து, நகரசபைக்கு நியமனத்திற்கான பரிந்துரைகளை செய்யும். நேர்காணல் தேதி மற்றும் நேரத்தை உறுதிப்படுத்த தகுதியான விண்ணப்பதாரர்கள் தனித்தனியாக தொடர்பு கொள்ளப்படுவார்கள். அக்டோபர் 1, 2022க்குள் நகர சபையினால் நியமனங்கள் செய்து முடிக்கப்படும்

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca